(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 8(5).]

# பாராளுமன்றம்

## 8ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 மே 22 புதன்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2013 யூன் 04, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

வெகுசன ஊடக, தகவல் அமைச்சர்,— பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் 10 ஆம் மற்றும் 25 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 பெப்புருவரி 15ஆம் திகதிய 1797/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2013.05.22ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2013 யூன் 07, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.181/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதிபதிகள் தொழில் பயிற்சி நிறுவகமொன்றை தாபித்தல்,— இலங்கையிலுள்ள நீதிமன்றங்களில் நீதி நிர்வாகத்தின் பொருட்டு பண்புசார் மேம்பட்ட நீதிபதிகளை உருவாக்குவதே முதன்மைத் தேவையாக காணப்படுவதால், அதற்கு தேவையான "பண்புசார் மேம்பட்ட" பயிற்சியொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு தற்போது தாபிக்கப்பட்டுள்ள "இலங்கை நீதிபதிகள் நிறுவகம்" எவ்விதத்திலும் போதுமானதாக இல்லையென்பதால், நீதிபதிகளை பயிற்றுவிப்பதற்கு பல்கலைக்கழகமொன்றின் தரத்துக்கேற்ற நீதிபதிகளின் தொழிற்பயிற்சி நிறுவகமொன்று தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.182/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா ,— இரண்டாம்நிலை பாடசாலைக் கல்வியையும் பல்கலைக்கழக கல்வியையும் ஆங்கில மொழியில் இலவசமாக போதித்தல்,— இலங்கையின் சகல அரச பாடசாலைகளிலும் இரண்டாம் நிலைக் கல்வியும் சகல அரச பல்கலைக்கழகங்களிலும் முழுமையான கல்வியும் ஆங்கில மொழியில் போதிக்கப்பட வேண்டுமென்றும், மேற்படி கல்வியானது முழுமையாகவே அரச செலவில் வழங்கப்படுகின்ற இலவச கல்வியாக அமைதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.183/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய நட்டஈட்டு வழக்குகளுக்கு சுருக்கமுறை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தல்,— மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய திடீர் விபத்துகளினால் உயிரிழந்த ஆட்களின் வாரிசுகளுக்கும் தங்கிவாழ்வோருக்கும், அவ்வாறான விபத்துகளினால் காயமடைந்த ஆட்களுக்கும் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கு மிகச் சிரமமானதும் நீண்டதுமான நீதிமன்ற செயற்பாடொன்றில் பங்குபற்ற நேர்ந்துள்ளதால் அவர்கள் மிகவும் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்படுவதனால், மோட்டார் வாகனங்கள் தொடர்பான நட்டஈட்டு வழக்குகளுக்கு சுருக்கமுறை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தும் வகையில் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.186/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் அல்லது நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை அதிகளவில் கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.188/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தேசிய விளையாட்டான கரப்பாந்தாட்ட விளையாட்டைத் தரம் உயர்த்துதல்,— உயர்ந்த அளவிலான திறனையும், சுறுசுறுப்பையும், உடலுறுதியையும், தீர்மானம் மேற்கொள்ளுதலையும், குழு முயற்சியையும் வேண்டி நிற்கும், அற்புதமான தேசிய விளையாட்டாகிய கரப்பாந்தாட்டத்தைத் தரமுயர்த்துவதற்கு, நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.189/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— "பீறலு" என அறியப்படும், பாரம்பரியக் கைத்தறி பின்னல் ஆடைக் கைத்தொழிலை தரமுயர்த்துதல்,— "பீறலு" குடிசைக் கைத்தொழிலை விருத்தி செய்து அதன் மூலம் பின்னல் ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமிய மக்கள் உயர் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள நவீன வசதிகளை ஏற்பாடு செய்யவும் உல்லாசப் பயணிகளிடையே, பின்னல் ஆடையையும், பின்னல் ஆடை உற்பத்திகளையும், பிரபல்யப்படுத்தவும், வினைத்திறனும், அர்த்தபுஷ்டியும் உடைய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013 யூன் 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2454/ '12

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) வெலிகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் கம்புறுகமுவ மெதகொடவில் அரசாங்க தாதியர் பயிற்சிக் கல்லூரியொன்று காணப்படுகிறது என்பதையும்;

(ii) மேற்படி தாதியர் பயிற்சிக் கல்லூரியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர் குழாத்திற்குப் போதுமான இட வசதிகளும் தங்குமிட வசதிகளும் இல்லை என்பதையும்;

(iii) இதன் காரணமாக மேற்படி கல்லூரிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவியரில் ஒரு பகுதியினர் ஸ்ரீ ஜயவர்தனபுர தாதியர் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தாதியர் கல்லூரியை மூடிவிடுவதற்கான ஆயத்தங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறு இல்லாவிடின், குறித்த கல்லூரியை வேறொரு இடத்திற்கு மாற்றுவதற்கான திட்டம் உள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், மேற்படி கல்லூரியை கொண்டுசெல்வதற்கு உத்தேசித்துள்ள இடம் யாதென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2798/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படுகின்ற பாதுகாக்கப்பட்ட வனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டிலும் 2012 ஆம் ஆண்டிலும் மேற்படி பாதுகாக்கப்பட்ட ஒவ்வொரு வனத்திற்கும் உரியதாகவிருந்த நிலப் பரப்புக்கள் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) பாதுகாக்கப்பட்ட வனங்களுக்குரிய நிலப் பரப்புக்கள் குறைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் பாதுகாக்கப்பட்ட வனங்களுக்குரிய நிலப் பரப்புக்களில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் இருப்பார்களாயின் அவர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) பாதுகாக்கப்பட்ட வனங்களுக்குரிய காணித்துண்டுகள் சட்ட ரீதியாக வழங்கப்பட்டிருப்பின், அக்காணிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) இக்காணிகளை வழங்கிய அதிகாரிகள் யாவர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் பாதுகாக்கப்பட்ட வனங்களுக்கு சேதம் விளைவித்த நபர்கள் யாவர் என்பதையும்;

(ii) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சேதங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நபர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2972/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகையைக் கூட செலுத்த முடியாதளவுக்கு மத்திய மாகாண சபை பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதென்பதையும்;

(ii) விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகை அந்த மாகாண சபையின் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்ட போதிலும் அந்தப் பணம் ஊழியர்களின் ஓய்வூதியக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஓய்வூதியத் திணைக்களத்துக்கு மத்திய மாகாண சபையினால் செலுத்த வேண்டியுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இதுவரை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகைக்காக கழிக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) ஓய்வூதியத் திணைக்களத்துக்கு செலுத்தப்பட இருந்த பணத்தை அந்த கணக்குகளில் வரவு வைக்க முடியாமைக்கான காரணம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மத்திய மாகாண சபை ஊழியர்களின் பங்களிப்புத் தொகைகளை இவர்களது ஓய்வூதிய கணக்குகளில் வரவு வைப்பதற்கும்;

(ii) இந்த மாகாண சபையில் நிலவும் நிதி மோசடி தொடர்பாக ஆராய்வதற்கும்;

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3205/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள மொத்த பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் சேவையாற்றும் பாலர் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இவர்களது பெயர், முகவரிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி பாலர் பாடசாலை ஆசிரியர்களை அரச நிரந்தர சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலர் பாடசாலைகள் பேணிவரப்படுகின்ற கட்டிடங்களின் நிலைமை யாதென்பதையும்;

(ii) நிரந்தர கட்டிடங்கள் அற்ற பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மின்சார வசதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) பாலர் பாடசாலைகளுக்கென ஏதேனும் கொடுப்பனவு வழங்கப்படுகின்றதா என்பதையும்

(v) ஆமெனின் அதன் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மின்சாரம், மலசலகூடம், கட்டிடம் ஆகிய வசதிகளற்ற பாலர் பாடசாலைகளுக்கு மேற்படி வசதிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) வட மத்திய மாகாண சபையினால் பாலர் பாடசாலைகளுக்கு பாலர் பாடசாலைகளுக்காக வழங்கப்படும் வசதிகள் யாவை என்பதையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3209/ '12

கௌரவ ஆர்.எம். ரன்ஜித் மத்தும பண்டார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2012 மே 01 உலக தொழிலாளர் தினத்தில் அதிமேதகு ஜனாதிபதி இ.போ.ச. ஓய்வுபெற்ற ஊழியர்களில் சிறு தொகையினருக்கு மாத்திரம் அடையாள ரீதியில் நிலுவை ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தியுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) 1978-1991 காலத்தினுள் பணியாற்றி ஓய்வுபெற்ற இ.போ.ச. ஊழியர்களில்,

(i) முழுமையாக ஓய்வூதிய பணிக்கொடை செலுத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஓய்வூதிய பணிக்கொடையில் ஒரு பகுதி மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி இ.போ.ச. ஊழியர்களின் நிலுவை ஓய்வூதியப் பணிக்கொடையை துரிதமாக வழங்குமாறு வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டு இதுவரை எவ்வளவு காலம் கடந்துள்ளது என்பதையும்;

(ii) இ.போ.ச. ஓய்வுபெற்றோர்களின் நிலுவை ஓய்வூதியப் பணிக்கொடையை துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3287/ '12

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் நகரில் தபால் அலுவலகமொன்று இல்லாமையினால் இப்பிரதேச மக்கள் கடும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதையும்;

(ii) ஹிதாயாபுரத்தில் பொத்துவில் மத்திய மகா வித்தியாலய வீதியில் இயங்கிவந்த உப தபால் அலுவலகம் மூடப்பட்டமையால் மக்கள் கடும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) பொதுமக்கள் முகம் கொடுக்கின்ற மேற்படி பிரச்சினைகளை கருத்திற்கொண்டு பொத்துவில் நகரில் உப தபால் அலுவலகமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3043/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பெருந்தொகையான செலவினத்துடன் 2 கட்டங்களின் கீழ் பொருத்தப்பட்ட கண்டி நகரத்தின் வர்ண சமிக்ஞை முறைமை 14 வருட காலமாக செயலிழந்த நிலையில் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்ண சமிக்ஞை முறைமைகளை பொருத்தும் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களில் பொருத்தப்பட்ட வர்ண சமிக்ஞை முறைமைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்கள் செயற்படுத்தப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) கண்டி நகரத்தில் காணப்படும் வாகன நெரிசலுக்கான தீர்வாக பொருத்தப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட வர்ண சமிக்ஞை முறைமைகளை பயனுள்ள விதத்தில் உபயோகிக்க முடியாத நிலைமையில் அதற்கு மாற்று வழிமுறையொன்று திட்டமிடப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2013 யூன் 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2519/ '12

கௌரவ புத்திக பதிரண,— தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் அகலவத்த பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கலேவத்த எனுமிடத்தில் பேணிவரப்படுகின்ற தேசிய மொழிகள் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மேற்படி நிறுவனத்தில் நிதி மோசடியில் ஈடுபட்டமை சம்பந்தமாக சனாதிபதி புலனாய்வுப் பிரிவினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி விசாரணைகளின் போது இவர் நிதி மோசடியில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்பது சனாதிபதி செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) நிதி மோசடி சம்பந்தமாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை தொடர்ந்தும் அதே நிறுவனத்தில் சேவையில் ஈடுபடுத்துதல் ஒட்டு மொத்தமான அரச சேவையும் சீரழிவுக்கு உள்ளாக்குவதற்கு காரணமாக அமையும் என்பதை அவர் கொள்வாரா?

(இ) (i) ஆமெனில், இவரை சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச் சபையில் அறிவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2565/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) சுற்றுலா நகரமான அளுத்கம நகரில் விரிவாக்கப்பட்ட வீதி முறைமைக்கு ஏற்றவாறு முறைசார்ந்த விதத்தில் அமைக்கப்படாதுள்ள வடிகால் தொகுதியில் கழிவுகள் தேங்கி இடையூறாக இருப்பதே நகரில் துர்நாற்றம் வீசுவதற்கு காரணமாக அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி நிலைமையை சீராக்குவதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அளுத்கம நகரில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பேரூந்து தரிப்பிடத்தின் கடைகள் இதுவரை வர்த்தகர்களுக்கு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2801/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் தலையீட்டுடன் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் பேணிவரப்படும் பழங்கள் ஏற்றுமதிக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) அதற்கான நிதி பெறப்பட்ட வழிமுறை யாதென்பதையும்;

(iv) அதன் கீழ் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு தொடக்கம் இதுவரை ஒவ்வொரு பழ வகையின் வருடாந்த உற்பத்தி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி நாடுகளுக்கு வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்படும் பழ வகைகள் மற்றும் அவற்றின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(viii)தற்போது இந்தக் கருத்திட்டம் அடைந்துள்ள முன்னேற்றம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2818/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சூரியவெவ கிரிக்கெட் மைதானம் தொடர்பாக,

(i) மாதாந்த மற்றும் வருடாந்த பேணல் செலவு, வட்டிச் செலவு ஆகியன எவ்வளவு என்பதையும்;

(ii) கடன் பெறு மூலதனச் செலவு எவ்வளவென்பதையும்;

(iii) மாதாந்தம் எதிர்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சூரியவெவ கிரிக்கெட் மைதான கருத்திட்டக் கடனை மீளச் செலுத்துதல் காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(ii) இக்காலப்பகுதிக்கான பணப் பற்றாக்குறை எவ்வளவு என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்திற்காக கடன் கொடுத்தவர்கள் அனைவருக்கும் கடன் மீளச் செலுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3044/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தின் மத்துமக, அகலவத்த மற்றும் புலத்சிங்கல பிரதேசங்களில் தனியார் மயப்படுத்தப்பட்ட அரச தோட்டங்களில் தொழிலாளர்களின் துப்புரவு ஏற்பட்டுப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட பணத்தொகை இத் தோட்டக் கம்பனிகளினால் குறைக்கப்பட்டுள்ளதால் இத்தொழிலாளர்கள் கடும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இத்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுகாதார வசதிகள் யாவை என்பதையும்;

(iii) இத்தோட்டத் தொழிலாளர் சமுதாயத்தில் தற்போது காணப்படும், தாய், சேய் மரணங்கள், தொற்றாத நோய்கள் பீடித்தல், முறையற்ற கர்ப்பமுறல், மற்றும் குறையூட்டம் தொடர்பான புள்ளிவிபரத் தரவுகள் யாவை என்பதையும்

(iv) இப் பிரதேசங்களுக்குத் தேவையான துப்பரவேற்பாட்டு மற்றும் சுகாதார வசதிகளை துரிதமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3051/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நாடுமுழுவதிலுமான ஆஸ்பத்திரிகளில் மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்களுக்கு கடும் பற்றாக்குறை காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில், மேற்படி பதவிக்காக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான குறித்த நியமன இடங்கள் திணைக்கள அதிகாரிகளால் திருத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களாக நியமனம் பெற்றவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் மேற்படி உத்தியோகத்தர்களின் நியமன இடங்களைத் திருத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) நியமன இடங்களுக்கான திருத்தங்களை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3052/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்வேறு நாடுகளிலிருந்து இந்நாட்டுக்குத் தேவையான சுமார் 7500 மருந்து வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி மருந்துகளை இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் இம்மருந்துகளிலிருந்து 800% வரை இலாபம் பெறுகின்றார்கள் என்பதையும்;

(iii) இதன் காரணமாக நோயாளர்கள் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெளிநாடுகளிலிருந்து இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகள் யாவை;

(ii) மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலையொன்றை விதிப்பதற்குத் தயாரிக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பாரா;

(iii) மருந்துப் பொருள் வர்த்தகம் மூலம் அநீதியான விதத்தில் இலாபம் ஈட்டும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 யூன் 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2569/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பாதுகாக்கப்பட்ட பிரதேசமென பிரகடனப்படுத்தப்பட்ட புலத்சிங்கல வகுரான வனம் அழிவுற்று வருகின்றது என்பதையும்;

(ii) மிகவும் அரிதான தாவர, விலங்கு வளங்கள் மிக்க இந்த வனத்தை பாதுகாப்பதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) இவ்வனத்தைக் கண்டுகளிப்பதற்காக வருகை தருவோருக்கு தகவல்கள் வழங்குவதற்கானதொரு செயற்திட்டம் இல்லை என்பதையும்;

(iv) படபொத்த கால்வாயினூடாக வகுரான வனத்திற்கு கழிவுகள் வந்தடைவதை நிறுத்துவதற்கானதொரு செயற்திட்டம் ஏற்படுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட கூருணர்வுடனான சுற்றாடல் வலயத்திற்கு பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களின் சேவையைத் துரிதமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2702/ '12

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பிரிவேனாக்களில் கல்வி பெறும் பிக்குமார்கள் பெரும் பொருளாதாரக் கஷ்டங்களின் மத்தியில் தமது கல்வி அலுவல்களைச் செய்து வருகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது பிரிவேனாக்களில் கல்வி பெறும் ஒவ்வொரு தீட்சைபெறாத அல்லது தீட்சை பெற்ற மாணவருக்கும் வருடாந்தம் வழங்கப்படும் உதவித் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இப்பணத் தொகை தற்போதைய பொருளாதார நிலைமையுடன் ஒப்பிடும் போது போதியதாக இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

(iii) அப்பணத் தொகையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

(iv) அவ்வாறாயின் அதிகரிக்கப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2804/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டையில் நடாத்தப்பட்ட "பீச் வொலிபோல்" போட்டித் தொடர் நடைபெற்ற திகதிகள் யாவை என்பதையும்;

(ii) இதற்கென அரசு செலவிட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) குறித்த பணம் செலவிடப்பட்ட விதம் யாதென்பதையும்;

(iv) குறித்த போட்டித் தொடரை ஏற்பாடு செய்தவர்கள் யாவர் என்பதையும்;

(v) அதில் பங்குபற்றிய நாடுகள் யாவை என்பதையும்;

(vi) இதில் பங்குபற்றிய விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) இதில் இலங்கை விளையாட்டு வீரர்கள் ஈட்டிய வெற்றிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2824/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உரிய செயல்முறைகளைப் பின்பற்றாமல் முப்படைகளை விட்டு விலகிய நபர்களின் எண்ணிக்கையினையும்;

(ii) படைகளை விட்டு அவர்கள விலகுவதற்கான காரணங்களையும்;

(iii) அவர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையையும்;

(iv) அவ்வாறு விலகுவது இடம்பெறுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கையினையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த 3 வருடங்களாக முப்படைகளுக்கும் ஏற்பட்ட செலவினை வருடாந்த அடிப்படையில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3053/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலிகம கனிஷ்ட வித்தியாலயத்தில் தற்போது கல்வி கற்கும் 249 மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக மூன்று ஆசிரியர்கள் மாத்திரமே இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையில் மேலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) தொழிலற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை கோரி குறிப்பிட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள கடும் சிரமங்கள் தொடர்பாக ஆராய்ந்து அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3253/ '12

கௌரவ பி. ஹரிசன்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்தற்கு,— (1)

(அ) (i) 2012 நவம்பர் மாதம் 09 ஆந் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலுக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) அன்றைய தினம் சிறைச்சாலையை சோதனையிடுவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஈடுபடுத்தப்பட்டமைக்கான காரணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சோதனையிடுதல் போதியதாயில்லாமையா என்பதையும்;

(iii) இதற்காக அந்த படையணியை ஈடுபடுத்துவதற்கு கட்டளை வழங்கியவர் யார் என்பதையும்;

(iv) சிறைச்சாலையை சோதனையிடும் பணியில் ஈடுபட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) இவர்கள் சிறைச்சாலைக்குள் ஆயுதங்களுடன் பிரவேசித்தார்களா என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட மோதலில்,

(i) கைதிகளுக்கு ஆயுதக் களஞ்சியத்தில் பிரவேசித்து ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் உதவி கிடைத்ததா என்பதையும்;

(ii) மதுவரித் திணைக்களத்தின் போதைப்பொருள் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரின் தனிப்பட்ட தேவையின் அடிப்படையில் கைதிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) சிறைக்கைதிகளின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) சிறைச்சாலை ஆயுதக் களஞ்சியத்திலிருந்து ஆயுதங்களைப் பெறுவதற்கு கைதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) உயிரிழந்த கைதிகள் சார்பில் நட்டஈட்டுத் தொகையொன்றைச் செலுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(iii) இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3054/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய அரசின் கீழ் உள்ள 50 வைத்தியசாலைகளின் துப்புரவுப் பணிகளை வெளி நிறுவனங்களினால் மேற்கொள்ளும் பொருட்டு ஆண்டொன்றுக்கு ரூபா 300 மில்லியன் செலவிடப்படுகின்றது என்பதையும்;

(ii) சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் சிலர் காலி கராபிட்டிய வைத்தியசாலையின் துப்புரவுப் பணிகள் தொடர்பான கேள்விப் பத்திரத்தை மோசடியான விதத்தில் மேற்கொள்கின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது கராப்பிடிய வைத்தியசாலையின் துப்பரவுப் பணிகளுக்கான கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள கம்பனி யாதென்பதையும்;

(ii) மேற்படி கேள்விப்பத்திரத்தின்படி மேற்கூறிய கம்பனியினால் மேற்படி வைத்தியசாலையின் துப்பரவுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்கூறிய கம்பனியினால் மேற்படி வைத்தியசாலையின் துப்புரவுப் பணிகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படாத நிலையில் கூட ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட கேள்விப் பத்திரத்தை அதே நிறுவனத்துக்கு வழங்குவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கேள்விப்பத்திரத்தை வழங்குகையில் மோசடியான விதத்தில் செயற்படும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2013 யூன் 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2523/ '12

கௌரவ புத்திக பதிரண,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப மில்கோ (தனியார்) நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்டொகுதியில் உள்ளடங்கியுள்ள விசாரணை உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2010 மே மாதம் முதல் இற்றைவரை இந்நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு விசாரணை உத்தியோகத்தரினதும் பெயர், முகவரி, நியமிக்கப்பட்ட திகதி, பிறந்த திகதி, நியமிக்கப்பட்ட திகதியன்று உள்ளவாறு வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) இவர்கள் நியமிக்கப்பட்டபோது பகிரங்க அறிவித்தல்கள் மூலமாக கோரப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி நியமனங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) நியமிக்கப்பட்ட திகதி முதல் 2012 பெப்ருவரி 29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில்,

(i) ஒவ்வொரு மாதத்திலும் விசாரணை உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம், கொடுப்பனவுகள், போக்குவரத்து செலவுகள், ஒருங்கிணைந்த படிகள், உணவுப் படி, மிகை ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விசாரணை அறிக்கைகளினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) விசாரணை உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) நீக்கப்பட்டவர்களின் பெயர்கள், நீக்கப்பட்ட திகதி மற்றும் நீக்கப்படுவதற்கான காரணம் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2574/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பெண்கள் பட்டயமொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இந்தப் பட்டயத்தில் அடங்கியுள்ள அடிப்படைப் அம்சங்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கை பெண்கள் பட்டயத்திற்கு சட்ட ரீதியான அதிகாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2805/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தில் பிரவேசத்திற்கு தடையாகவிருந்த கருங்கற்பாறையின் அளவு எத்தனை சதுர அடி என்பதையும்;

(ii) மேற்படி கருங்கற்பாறையை அகற்றுவதற்காக மதப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் குறித்த கருங்கற்பாறை முற்றாக உடைத்து அகற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அதற்கென செலவான மொத்தப் பணத்தொகை மற்றும் அத்தொகையைப் பெற்றுக்கொண்ட விதம் யாதென்பதையும்;

(v) கருங்கற்பாறையை அகற்றும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட கம்பனியின் பெயர் யாதென்பதையும்;

(vi) குறித்த கம்பனி எந்த நாட்டுக்குச் சொந்தமானது என்பதையும்;

(vii) சரக்குக் கப்பல்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தினுள் பிரவேசிப்பதற்கு இடையூறாகவிருக்கும் பிற தடைகள் உள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2827/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 முதல் 2011 வரை இலங்கையில் தொழில்புரிவதற்கு அனுமதியளிக்கப்பட்ட இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும்;

(ii) இந்திய நாட்டவர்களுக்கான வீசா தேவைப்பாடுகளில் மிகுந்த அதிகரிப்பு ஏற்படுவதற்கான காரணத்தையும்;

(iii) வருகைதந்துள்ள இந்தியர்களுக்கான வீசாவுக்கு ஏன் கட்டணம் அறவிடப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் வேறு ஏதாவது நாட்டின் 500 இற்கும் அதிகமான தொழிலாளர்கள் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) வெளிநாட்டவர்களை தொழில்புரிவதற்கு இங்கு அனுமதிப்பதால் இலங்கை பெற்றுக்கொள்ளும் நன்மைகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3055/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசிய ஔடதங்கள் ஒழுங்குமுறையாக்கல் அதிகார சபையினால், நோயாளர்களுக்கு பக்கவிளைவுகள் ஏற்படக் கூடிய லிக்னொகேன் ஹைட்ரோக்குளோரைட்டு எனப்படும் ஜெல் வகையை 2012 ஏப்பிறல் மாதம் 09 ஆம் திகதியிலிருந்து பாவனையிலிருந்து அகற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள போதிலும் இன்னமுமே ஒரு சில மருத்துவமனைகளில் குறித்த ஜெல் வகை நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் பொருட்டு பயன்படுத்தப்படுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஜெல் வகையை பாவனையிலிருந்து அகற்றுவதற்கு வெற்றிகரமான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தற்போதுகூட குறித்த ஜெல் வகையை பயன்படுத்துகின்ற மருத்துவமனைகள் தொடர்பாக ஆராய்ந்து, அவற்றை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) குறித்த ஜெல் வகைக்குப் பதிலாக, குறிப்பிட்ட பகுதியை உணர்விழக்கச் செய்வதற்காக நோயாளர்களுக்கு அனுகூலமான வேறொரு ஜெல் வகையை இறக்குமதி செய்யாதது ஏனென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3056/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 5 வருட காலத்தில் சுகாதாரத் துறையில் தரமற்ற ஔடதங்கள் இறக்குமதி செய்யப்பட்டமை, ஔடதங்களை சரியான முறையில் களஞ்சியப்படுத்தாமை, ஔடதங்களை தவறான முறையில் மறைத்து வைத்திருத்தல், காலாவதியான ஔடதங்களையும் மருத்துவ உபகரணங்களையும் மீண்டும் உபயோகித்தல் மற்றும் பதிவு செய்யப்படாத ஔடதங்களை இறக்குமதி செய்தல் போன்ற பல்வேறு முறைகேடுகள், ஊழல்கள் மற்றும் மோசடிகள் பெருமளவில் இடம்பெற்றுள்ளன என்பதையும்;

(ii) இவை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னமுமே அமைதிப் போக்கினை கடைப்பிடித்து வருகிறார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காலத்தில் சுகாதார அமைச்சில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள், ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பான அறிக்கையொன்றை இந்த சபைக்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி ஊழல்கள், மோசடிகள் மற்றும் முறைகேடுகளுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) நோயாளர்களான மக்கள் உயிர் ஆபத்துக்கு உள்ளாக்குகின்ற வகையில் இடம்பெறும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான முறைகேடுகள் தொடர்பாக இதுவரை உரிய கவனம் செலுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3060/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வன விலங்குகள் மற்றும் தாவரங்களை பாதுகாக்கும் நோக்கத்தை முன்னிறுத்தி தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம் உருவாக்கப்பட்ட போதிலும், இன்றளவில் பல்வேறு அரசியல்வாதிகளினதும் வர்த்தகர்களினதும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அதன் சில பிரிவுகள் திருத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இன்றளவில் தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தில் திருத்தப்பட்டுள்ள பிரிவுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரிவுகள் திருத்தப்பட்ட பின்னர் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய சட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டளைச்சட்டத்தில் மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்களைச் சேர்ப்பதற்கான தேவையை முன்னிறுத்தி செயற்பட்டவர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?